www.tamilarangam.net

# சிறுவர் அமுதம்

கிண்ணம் 1 வைகாசி எண்ணம்



## சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

CHILDREN LITERATURE MAGAZINE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வைகாசி. எண்ணம் 5.

சிறுவர் இலக்கியம் என்றுஞ் சிறுவர்களாகத் தேடி விரும்பிப் படிப்பதாக இருக்க வேண்டும். இது உண்மையே!. ஆனால் வெளிநாடுகளில், ஒவ்வொரு விதம் விதமான தரங்களில் வாழும் சிறுவர்களை ஒருங்கிணைத்து ஒரே தரமான சஞ்சிகைக்குள் அடக்குவது என்பது இயலக்கூடிய வேலையல்ல!.

கதைகள் மூலம் அவர்களைத் தாய்மொழிக்குள் இழுத்துவிடலாம் என எதிர்பார்க்கின்றேன். கதைகளைப் பெற்றோரோ மற்றோரோ வாசித்து விளங்கப் படுத்தினால்?. அவர்களும் தமிழ் படிக்க வேண்டும் என எண்ணுவார்கள். அன்னிய மொழிகளில் விளங்கிக் கொள்வதில் ஏற்படுகின்ற சிரமங்கள் தாய் மொழியில் இருக்காது. எனவே இந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமுதத்தில் வருகின்ற கதைகளையும் ஏனைய விடயங்களையும் சிறுவர்களுக்கு வாசித்து விளங்கப் படுத்த வேண்டும். என உங்கள் எல்லோரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

சிறுமியர் சர்வதேச ஆண்டான இந்த ஆண்டில் நாமும் எமது வருங் கால சந்ததிகளான சிறுமியர், எதிர்காலத் திற்கான ஆக்கபூர்வமான திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

அன்புடன்,

- ஆசிரியர் -

## அட்டைப்படம்

சர்வதேச சிறுமியர் ஆண்டிற்கு; எட்டு வயதுச் சிறுமியான மங்கை -இராஜேஸ்- வரனின் கைவண்ணத்தில் உருவான படங்களை அட்டைப் படமாக்கி அமுதம் தனது வரவேற்பைத் தெரிவித்து மகிழ்ச்சி அடைகின்றது.

www.tamilarangam.net



சுவிஸ்:

# சிறுவர் பாடசாலையில் தமிழ் பிஞ்சுகளின் வேதனை

குழந்தை பராமரிப்பு நிலையங்களிலும் சிறுவர் பாடசாலைகளிலும் எமது மழலைகள் படும் துயரம் தமிழ்மக்கள் அனைவரது கவனத்தையும் இப்போது மெல்ல மெல்ல ஈர்க்கத் தொடங்கியுள்ளது.

அண்மைக்காலத்தில் அதிக தமிழ்க் குழந்தைகள் சுவிஸ்க் குழந்தைகளுடன் சேர்ந்து படிக்கவிடப்பட்டுள்ளதை அனைவரும் அறிவோம். தொழில்புரிய வேண்டி நாம் எமது குழந்தைகளை தவிர்க்கமுடியாத நிலையில் குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களில் விட்டுவிட்டு வேலைக்குச் செல்கின்றோம் . பணத்திற்காக பெற்றோரைப் பிரிந்து ஆயாவிடம் சுவிஸ் முறையில் வாழவேண்டிய நிர்ப்பந்தம் எம் மழலைச் செல்வங்களுக்கு ஏற்படுத்தப்படுகிறது. ஒய்வு நேரங்களில் தாய்ப் பாசையையும் ஏனைய நேரங்களில் "ஆயாப்பாசையையும்" -கள்ளமில்லா அன்பை, கன்னித் தமிழ்ப்பண்பை கலந்துணவாய் நாமதற்கு ஊட்டிடவேண்டும்- என்பதற்கிணங்க ஊட்டுகிறோம்.

எம்மைப் பொறுத்தவரையில் எமது குழந்தைகள் இரண்டு மொழிகளிலும் சிறப்பாகத் தேர்ச்சி பெறுவார்கள், பெறுகிறார்கள் அல்லது பெற்றுவிட்டார்கள். இரண்டு வேறுபட்ட கலாச்சாரமும் அவர்களுக்குத் தண்ணி பட்டபாடு.

ஆனால் உண்மை நிலை என்ன ?
தமிழ் குழந்தைகள் மற்றய குழந்தைகளால் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்களா ?
இரண்டு மொழிகளில் ஒன்றையாவது ஒழுங்காகக் கதைக்கிறார்களா ?
இரு வேறுபட்ட கலாச்சாரங்களை உண்மையில் பழகிவிடுவார்களா ?
இவற்றிற்கு விடைகாண முற்படும் போதுதான் எமக்கு அதிர்ச்சி ஏற்படுகிறது !

ஏனைய குழந்தைகள் எமது குழந்தைகளை ஒதுக்கியே வைக்கின்றார்கள். குழந்தைகள் இலகுவாகச் சேர்ந்துவிடுவார்கள் என்பது எந்தளவுக்கு உண்மையோ அதேயளவு உண்மை குழந்தைகள் இலகுவாக விலகிவிடுவார்கள் என்பதும். எமது வீட்டில் முற்றிலும் மாறுபட்ட சூழலையும் பழக்க வழக்கங்களையும் காணும் எமது குழந்தைகள், விடிந்ததும் வேற்று உலகில் தனிமையாக விடப்படுகின்றார்கள்.

வளர்ந்தவர்களால், வந்த புதிதில் உணரப்பட்ட அதே தனிமையும் வேற்றுமையும் !!
நாம் அதை சகித்துக்கொண்டோம் ..... சமாளித்துக்கொண்டோம்......
ஆனால் எம் குழந்தைகள் ..............................................

www.tamilarangam.net

ஆயாவை தன்பக்கம் இழுக்க தம்சக்திக்கு எட்டியபடி முயற்சிக்கிறார்கள். சம்பளம் பெறும் ஆயாவோ மற்றைய குழந்தைகளையும் கவனிக்க வேண்டிய நிலையில் உள்ளார் இதனால் எமது குழந்தையின் விரக்தி ஏனைய குழந்தைகள் பக்கம் திரும்புகிறது...

முடிவு ? புத்தகக்கிழிப்பு .... பொம்மையறிப்பு.... குழந்தைத்தனம்........

ஆயாவின் முறைப்பாடு.... அது.. இது..

பெற்றோராகிய நாம் கூறுகிறோம் குழந்தைகள் என்றால் அப்படித்தானே என்று. பராமரிப்பாளர்கள் கூறுகிறார்கள் எமது குழந்தைகள் சேர்ந்துபோகிறார்களில்லை விட்டுக்கொடுக்க மறுக்கிறார்கள் எனவே இக்குழந்தைகளுக்கு "விசேடவகுப்புக்கள் மூலம் உதவியளிக்கப்பட வேண்டும் " என்று. அதாவது எமது குழந்தைகளின் உளவிருத்திக்கு, அமைதியற்ற தன்மையைப் போக்குவதற்கு, உதவி பெற SOZIAL-PAEDAGOGISCHER DIENST DER SCHULEN எனும் சிறுவர் உளவியல் நிபுணர் நிறுவனத்தில் "உதவி" கோரப்படுகிறது. வழமை போல பராமரிப்பு நிலையத்திற்கு செல்லும் குழந்தை கிழமையில் ஒன்று அல்லது இரண்டு மணித்தியாலங்கள் உளவியலா-ளரின் பயிற்சிக்கு உள்ளாக்கப்படுவார்கள். பெற்றோர் இதற்கு செலவு செய்ய வேண்டியதில்லை அரசாங்கமே பொறுப்பு என்பதால் கவலையும் இல்லை.

ஆனால் எமது குழந்தைகள் மனநோயாளராக ஆக்கப்படுகிறார்கள் !!!!!

இதற்குப் பொறுப்பாளர் யார் ? பெற்றோராகிய நாங்கள் தான் !!

எமது வசதிக்கும் வாழ்வுக்குமாக ஒருபாவமும் அறியாத எமது குழந்தைகளின் எதிர் காலத்தையே நாசமாக்குகின்றோம். எம்மைப்பொறுத்த வரையில் சூனியமான எதிர்காலம். எமக்கு எங்கே விடிவு அல்லது எமது நாடோடித்தனத்திற்கு எங்கே முடிவு எனத்தீர்மானிக்க தயங்குகின்றோம். எமது தாயகம் தான் எமக்குப்போக்கிடம் என்பதை ஏற்க ஏனோ தயங்குகின்றோம்.

இதனால் எமது குழந்தைகளுக்கு தமிழை படிப்பிக்காமலேயே விட்டுவிடுகிறோம் எமக்கு அல்லது எமது பிள்ளைகளுக்கு சுவிஸ் தான் எதிர்காலம் என ஏனோ எம்மையறியாமலேயே எண்ணிக்கொண்டு, பிள்ளைகளின் எதிர்காலம் " டொச் " Deutsch ல் தான் என்று குழந்தை பராமரிப்பு நிலையத்திற்கு அவர்களை அனுப்பி எமது கடமையை பூர்த்தி செய்ய முனைகிறோம். அவர்கள் அரைகுறையாய் அந்தப்பாசை கதைக்கும் போது " பிடிச்சிடுங்கள் எங்கடபள் " என்று பெருமைப் படுகின்றோம். அத்துடன் விடாமல் எமக்கு தெரிந்த கொச்சைப் பாசையையும் திணித்து விடுகின்றோம்.

## இது எமது அடுத்த மடமைத்தனம்

இங்குள்ள பராமரிப்பு நிலையங்களோ ( Tagesheim ) சிறுவர் பாடசாலைகளோ (Kinder-Garten) குழந்தைகளுக்கு மொழி படிப்பிப்பதில்லை என்ற விடயம் பல பெற்றோருக்குத் தெரிவதில்லை. பராமரிப்பு நிலையத்தில் பெற்றோரை பிரிந்த பிள்ளைகள் பராமரிக்க படுவதுடன் அடுத்த வருடம் சிறுவர் பாடசாலைக்கு போகவிருக்கும் பிள்ளைகளை அதற்கு தயார் செய்கிறார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுவர் பாடசாலையில் ஒழுக்கம், அமைதிபேணல், சேர்ந்து விளையாடல, அவதானித்தல், பார்த்துச்செய்தல், அபிநயம் பிடித்தல், நிறம் அறிதல், சூழல் அறிதல் போன்ற முக்கிய விடயங்களை சொல்லிக்கொடுப்பதில் முதல் வருடத்தையும் பாடசாலைச் சூழலை தெரிந்து கொள்ள இரண்டாம் வருடத்தையும் பயன் படுத்துவர். முதலாவது எழுத்தை பாடசாலையில் (Schule) வைத்தே படிப்பிப்பார்கள்.

நன்றிகளுடன்: மனிதம் சஞ்சிகையி

# எமது சிறுவர்கள்

குழந்தைகள் என்னிடம் வருவதைத் தடை செய்யாதீர்கள். மோட்ச ராஜ்ஜியம் அவர்களுடையதே என்றார் யேசுபிரான். மழலைகளின் மொழியே உலகின் மகாத்தான இன்னிசை என்றார், திருக்குறள் தந்த தெய்வப்புலவர். முல்லைச் சிரிப்பினிலே மூர்க்கம் எல்லாம் தீர்த்திடுவாய் என்றார் பாப்பாப் பாட்டுப் பாடிய பாரதியார்



www.tamilarangam.net

உலகில் தோன்றிய எல்லா அறிஞர்களும் குழந்தைச் செல்வங்கள் பற்றிப் பெருமையாகச் சொல்லி இருக்கி-ன்றார்கள். சர்வதேச நாடுகளின் தாபன-மான ஐக்கிய நாடுகள் நிறுவனம் இவ்வாண்டைச் சிறுமியர் ஆண்டாகப் பிரகடனம் செய்துள்ளது. இதே வேளையில் அன்னிய நாடுகளில் தற்காலிகமாக வாழும் தமிழர், தம் சிறுவர்களின் எதிர்காலம் பற்றிய சிந்தனை எதுவும் இன்றி, அவர்களின் எதிர்காலத்தைப் பாழடித்துக் கொண்டிருக்கி-ன்றார்கள். சுவிஸ்ஸில் இருந்து வெளிவரும் மனிதம் சஞ்சிகையில் ....

"சிறுவர் பாடசாலையில் தமிழ் பிஞ்சுகளின் வேதனை" எனும் துயரமான கட்டுரை ஒன்று வெளியாகி உள்ளது. சுவிஸில் அது ஒரு விதமான வேதனை; என்றாலும், பிரான்ஸ், ஜேர்மனி, டென்மார்க், என்று ஒவ்வொரு நாட்டிலும், எங்கள் தமிழ்ப் பிஞ்சுகள் நாளாந்தம் பல விதமான வேதனைகளுக்கு

www.tamilarangam.net

ஆளாகிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் எதிர்காலம் இருட்டுக்குள் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அன்னிய நாட்டு நிலைமையால், பாதிக்கப்படும் சிறுவர்கள், வாழும் வீட்டுச் சூழலாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். தாய்மொழியிலிருந்து அவர்கள் முற்றாக ஒதுக்கப்பட்டுள்ளார்கள். தமது பிள்ளைகள் அன்னிய மொழிகளைக் கற்பதைப் பெருமையாக எண்ணும் ஒருவித மனோபாவம் தமிழ்ப் பெற்றோர் மத்தியில் குடி கொண்டுள்ளது. தமது பிள்ளைகள் இந்த அன்னிய மொழிகளைக் கற்றால் தாம் அதைச் சாட்டியே இங்கு தங்கிவிடலாம் என்ற நினைப்பில்....

குழந்தைகளைத் தாய் மொழியில் நின்றும் பிரிக்கின்றார்கள். தாங்கள் ஏதோ இந்த நாட்டுப் பிரசைகள் போன்ற எண்ணத்தைக் குழந்தைகளின் மனதில்

www.tamilarangam.net

வளர்க்கின்றார்கள். தாய் மொழியில் இருந்து வேறுபடுத்தியது மட்டுமல்ல.. தாயிடம் இருந்தும் குழந்தைகள் வேறுபடுத்தப் படுகின்றன. சுவிஸ், பிரான்ஸில் இடம்பெற்ற பல சம்பவங்கள் மிகவும் துயரமானவை. மனிதாபிமான முள்ள எவராலும் சகிக்க முடியாத கொடூரங்கள் தான் அவைகள்.

சிறுவர்கள் எதையுமே இலகுவில் உட்கவரும் தன்மை கொண்டவர்கள். இவர்கள் எதை உட்கவர வேண்டும் என்ற விடயத்தில் நாம் கவனமாக நடந்துகொள்கின்றோமா?, எனச் சிந்திக்கும் பெற்றோர் மிக மிகக் குறைவு. வெளிநாட்டுப் போலித்தனமான வாழ்க்கை முறை, அதையே உண்மையானதாக நம்பிக்கொண்டிருக்கும் நிலைமை. எல்லாமே எமது தமிழ்ப் பிஞ்சுகளின் எதிர்காலத்தைக் கருக்கிக் கொண்டிருக்கின்றன.

சுற்றுடல் வாழ்க்கையும், சுற்றுட

www.tamilarangam.net

ல் கல்வியும் இல்லாத நிலையில் எமது குழந்தைகள் சிறைக்கூட வாழ்க்கையை வாழ்கின்றார்கள். தாய் நாட்டில் குழல், சுற்றாடல், எனப் பரந்து திரிந்த மனங்கள் கூட்டில் அடைபட்டுக் கிடக்கின்றன. பல இடங்களில் தாய், தந்தையின் அன்பு, ஆதரவு இன்றி 'வெறும் பெல்ட்அடி' தான் வாழ்க்கை என எண்ணிக்கொண்டு விரக்தி, வேதனை காணும் சிறார் பலர். தாய் தந்தையிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டியவை கூட எமது சிறர்களுக்கு அன்னிய மண்ணில் இடையாது போய்விட்டது. இயந்திர வாழ்க்கையேதான்.

" நல்ல குடும்பங்களைப் போன்ற பாடசாலையையும், ஒழுக்கம் மிக்க பெற்றோரைப் போன்ற ஆசிரியர்களையும் வேறெங்கும் காண முடியாது."

என்ற அமுதவாக்கில் பெற்றோரைப் போன்ற ஆசிரியர்கள் வெளி நாட்டில் எம்குழந்தைகளுக்கு இல்லை

www.tamilarangam.net

என்றே சொல்லலாம். சிறுவர்கள் பாடசாலையில் கற்பதை விடப் பெற்றோர்களிடமிருந்து கற்றுக்கொள்வதே அதிகம் என்பதைப் பல பெற்றோர் தெரியாமல் இருக்கின்றார்கள். வீட்டில் பெற்றோர் நடந்து கொள்ளும் விதங்களிலிருந்து பிள்ளைகள் கற்றுக் கொள்கின்றார்கள். அப்பா என்றால் அடிப்பவர், அம்மா என்றால் திட்டுபவர் என்ற நிலை எம் சிறுவர்கள் பலர் மனதில் பதிந்துவிட்டது.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை
தான்; மண்ணில் பிறக்கையிலே
அவர் நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும்
அன்னை வளர்ப்பினிலே"

என்பதை

வெளிநாட்டில் வாழும் தமிழ்ப் பெற்றோர் மனதிற் கொண்டு, சிறுவர் வளர்ப்பு, பராமரிப்பு என்பன வற்றை பொருத்தம் இல்லாதவர்களிடம் விடாமல் சிறார்களில் கவனம் எடுப்பார்கள் என்றால்? சிறுமியர்

www.tamilarangam.net

கண்டிற்கும் நமது எதிர்காலத்திற்கும் அது பொருந்தும் என்பது உண்மையே

— ஆன் —

# புலியை விடுவித்த வழிப்போக்கன்

ஒரு நாள் வழிப்போக்கன் ஒருவன் ஒரு காட்டு வழியே சென்று கொண்டிருந்தான்.

காட்டில் எங்கிருந்தோ புலியின் உறுமல் ஓசை கேட்டது. வழிப்போக்கன் பயத்துடன் ஓடத் தொடங்கினான்.

''வழிப்போக்கனே, பயப்படாதே! இங்கே வா! நான் உன்னை ஒன்றும் செய்யமாட்டேன்'' என்ற குரல் கேட்டது.

வழிப்போக்கன் தயக்கத்துடன் குரல் வந்த திசையை நோக்கிச் சென்றான்.

அங்கு ஒரு கூண்டில் புலி அடைபட்டு இருந்தது. வேட்டைக்காரர்கள் சிலர் புலியை உயிருடன் பிடிப்பதற்காக ஒரு கூண்டு செய்து அதற்குள் ஓர் ஆட்டை விட்டு வைத்திருந்தனர். ஆட்டிற்கு ஆசைப்பட்ட புலி கூண்டிற்குள் மாட்டிக் கொண்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழிப்போக்கனைப் பார்த்த புலி, "வழிப் போக்கனே, என்னை இந்தக் கூண்டிலிருந்து விடு வித்துவிடு. நான் உனக்குப் பல உதவிகளைச் செய்வேன்" என்றது.

"நீயோ மனிதர்களைக் கொன்று தின்பவன். உன்னை எப்படி நான் விடுவிக்க முடியும்?" என்றான் வழிப்போக்கன்.

"மனிதர்களைக் கொல்லும் சுபாவம் எங்க ளுக்கு உண்டுதான். அதற்காக உயிர் காக்கும் உன்னைக் கூடவா அடித்துக் கொன்றுவிடுவேன். அவ்வளவு நன்றியில்லாதவனா நான். பயப்படாமல் கூண்டின் கதவைத் திற. உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன்" என்று நயமாகக் கேட்டுக்கொண்டது புலி.

வழிப்போக்கன் புலியின் வார்த்தையை உண்மையென்று நம்பிவிட்டான். கூண்டின் கதவைத் திறந்தான். அவ்வளவுதான்! புலி வழிப் போக்கனின் மேல் பாய்வதற்குத் தயாராயிற்று.

இதனைக் கண்ட வழிப்போக்கன், "புலியே, நீ செய்வது உனக்கே நியாயமாகப் படுகிறதா? உன் பேச்சை நம்பி உன்னைக் கூண்டிலிருந்து விடுவித் தேனே அதற்கு இதுதானா நீ காட்டும் நன்றி" என்றான்.

"என் உயிரைக் காத்துக்கொள்வதற்காக நான் ஆயிரம் சொல்லுவேன். அதை நீ எவ்வாறு நம்ப லாம்? மனிதர்கள் என்றால் பகுத்தறிவுள்ளவர்கள் என்றுதானே பொருள். அந்த அறிவைக் கொண்டு

www.tamilarangam.net

இது நல்லது, இது கெட்டது என்று பகுத்தறிய முடியாதவன் நீ. முட்டாள்தனமான உன் செய்கைக்கு நான் எப்படிப் பொறுப்பாக முடியும்?'' என்றது புலி.

''நீ. செய்வது நியாயமில்லை. உன்னைக் கூண்டிலிருந்து விடுவித்ததற்கு இம்மாதிரி நடந்து கொள்வது முறையல்ல'' என்றான் வழிப்போக்கன்.

அவ்வழியாக ஒரு நரி வந்து கொண்டிருந்தது.

''இதனிடமாவது நியாயம் கேட்டுப் பார்ப்போம் என்று கூறிய வழிப்போக்கன் நடந்த கதையனைத்தையும் நரியிடம் கூறினான்.

புலியும், ''எங்களுடைய தொழில் அனைவரையும் அடித்துக் கொன்று சாப்பிடுவதுதான். இது இவனுக்கு நன்றாகத் தெரிந்திருந்தும் கூட என்னைக் கூண்டிலிருந்து விடுவித்தான். முட்டாள் தனமான இந்தச் செய்கைக்கு உரிய பலனை இவன் அனுபவித்தே தீர வேண்டும்'' என்றது புலி.

அனைத்தையும் கேட்ட நரி ஒன்றும் புரியாததைப்போல் பாவனை செய்தது.

''நீங்கள் இந்த மாதிரி சொன்னால் எனக்கு ஒன்றுமே புரியமாட்டேன் என்கிறது. ஆரம்பத்திலிருந்து சொல்லுங்கள்'' என்றது நரி.

உடனே புலி சொல்லத் தொடங்கியது:

''நான் அந்தக் கூண்டிற்குள் அடைந்து கிடந்தேன்.''


www.tamilarangam.net

இதைக் கேட்ட நரி, "எந்தக் கூண்டிற்குள்?" என்றது.

"அதோ இருக்கிறதே அந்தக் கூண்டிற்குள்" என்றது புலி.

"எப்படி அடைந்து கிடந்தீர்கள்?" என்றது நரி. புலி விடுவிடுவென்று கூண்டிற்குள் சென்றது. இதுதான் சமயம் என்று கருதிய நரி சட்டென்று கூண்டுக் கதவை இழுத்து மூடி விட்டது.

"நரியாரே, இது என்ன அயோக்கியத்தனம்! நியாயம் கூறுவதாகக் கூறி என்னை மறுபடியும் கூண்டில் அடைத்து விட்டீரே!" என்று கத்தியது புலி.



"பேசாமல் கூண்டிற்குள்ளேயே இருங்கள். நான் ஒன்றும் இந்த வழிப்போக்கனைப் போல் முட்டாள் அல்ல. உங்களுக்குச் சாதகமாக நியாயம் சொன்னால் முதலில் வழிப்போக்கனை அடித்துக் கொல்வீர்கள். பிறகு என்னையே அடித்துக் கொன்று விடுவீர்கள். அதனால்தான் உங்களைக் கூண்டிற்குள் செல்லுமாறு செய்து கதவைப் பூட்டி விட்டேன் என்றது" நரி.

(மாணவர் நீதிக்கதைகளிலிருந்து)

www.tamilarangam.net

(பஞ்சதந்திரக் கதைகளிலிருந்து)

# வேடனும் புறாக்களும்

ஒரு பெயரில் இரண்டு கதைகள்-

வேடன் ஒருவன் புறாக்களைப் பிடிப்பத ற்காக வலையை விரித்து விட்டுக் காத்திருந்-தான். கொஞ்ச நேரத்தின் பின்னர் புறா ஒன்று : வலையில் விழுந்து சிக்கிக் கொண்டது. அதனால் வலையிலிருந்து தப்ப முடியவில்லை.

புறா ஒன்று வலையில் வீழ்ந்து கஸ்டப் படுவதைக் கண்ட ஏனைய புறாக் கள் எல்லாம் ஒன்று சேர்ந்து வலையைத் தூக்கிக் கொண்டு பறந்தன. இதனால்: வலையில் அகப்பட்ட புறா தப்பிக் கொண்டது *

எல்லோரும் ஒற்றுமையாக இருந்தால் அபத்திலிருந்து தப்பிவிடலாம் என்ற நீதி இதில் சொல்லப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(டால்ஸ்டாயின் நீதிக்கதைகளிலிருந்து)

(2) வேடனும் புறாக்களும்

வேடன் ஒருவன் புறாக்களைப் பிடிப்பதற்கா-க, வலை ஒன்றை விரித்துவிட்டு, அருகில் இருந்த மரத்தின் பின்னால் ஒளிந்துகொண்-டான். புறாக்கள் வந்து வலையில் வீழ்ந்தன. ஆனால் வேடன் அவற்றைப் பிடிக்க முன்னர் அவை வலையைத் தூக்கிக்-கொண்டு பறந்து விட்டன.

வேடனும் அவற்றைத் துரத்திக்கொண்டு ஓடினான். வழியில் வேடனைக் கண்ட ஒருவர் "வானத்தில் பறந்து கொண்டிருக்கும் புறாக்களைத் தரையில் ஓடிக்கொண்டு உன்னால் பிடித்துவிட முடியுமா?" என்று கேட்டார்.

"வலையில் ஒரு புறா இருந்தால் என்னால் பிடிக்க முடியாது. இவைகள் அதிகமாக இருப்பதால் எப்படியும் என்னால் பிடித்து விடமுடியும்" என்று பதில் சொல்லிக்கொண்டே வேடன்

www.tamilarangam.net

ஓடிக் கொண்டிருந்தான்.

மாலை நேரம் வந்தது. புறக்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசையை நோக்கி இருந்தன. சில வயல் பக்கம் இருந்தன. சில காட்டுப் பக்கம் இருந்தன. அவைகளில் யார் பெரியவர்?, யார் சொல்வதை மற்றவர்கள் கேட்கவேண்டும்? என்ற பிரச்சினை வளர்ந்தது. இதனால் எல்லாம் வலையோடு சேர்ந்து கீழே விழுந்தன. ஓடிவந்த வேடன் அவை எல்லாவற்றையும் பிடித்துக் கொண்டான்*

"இக் கதையில் ஒற்றுமை என்பது நான், நீ, என்பவற்றிற்கு அப்பாற்பட்டது. நான் பெரிது, நான் சொல்வதைத்தான் நீ கேட்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டால் பயனடைவது மற்றவர் தான் என்ற உண்மை சொல்லப்பட்டுள்ளது இரண்டு கதைகளிலும் ஒற்றுமை பற்றியே சொல்லப்பட்டுள்ளன. ஆனால் வித்தியாசமாக *



தொடர்:

# தெனாலிராமன்

## குதிரை வளர்த்த கதை!

கிருஷ்ணதேவராயர் தன்னுடைய குதிரைப்படையைப் பெருக்கத் திட்டமிட்டார். இதற்காக அராபியாவிலிருந்து ஆயிரம் குதிரைக்குட்டிகளை வரவழைத்தார். ஆயிரம் குதிரைக் குட்டிகளையும் குறைந்த செலவில் வளர்க்க வேண்டுமென்று நினைத்தார் இராயர்.

பட்டணத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்தாரிடமும் ஒரு குதிரைக் குட்டியைக் கொடுத்து அவர்களை வளர்த்துக் கொண்டுவரச் சொன்னார் இராயர். இதற்காக ஒவ்வொரு குதிரைக்கும் நாளொன்றுக்கு மூன்று வராகன்கள் அரண்மனையிலிருந்து கொடுக்கச் சொன்னார்.

தெனாலி இராமனிடமும் ஒரு குதிரைக் குட்டி கொடுக்கப்பட்டது.

தெனாலி இராமன் குதிரைக் குட்டியை ஒரு கொட்டிலில் கட்டினான். கொட்டிலைச் சுற்றிலும் நான்கு புறமும் சுவர் எழுப்பினான். குதிரையின் தலைக்கு நேராக சுவரில் ஒரு சன்னல் மாதிரி வைத்தான். அந்த சன்னல் வழியாக நாள்தோறும் ஒரே ஒருவேளை சிறிது காய்ந்த புல்லைக் கொட்டிலுக்குள் வீசுவான் இராமன்.

பசியோடிருக்கும் குதிரைக் குட்டியோ தெனாலி இராமன் புல்லை வீசுவதற்குள், அவன் கையிலிருந்தே அதைப் பிடுங்கித் தின்றுவிடும்.

www.tamilarangam.net

இவ்வாறு நாள்தோறும் சிறிதளவு காய்ந்த புல்லை மட்டுமே சாப்பிட்டு வந்த தெனாலி இராமனின் குதிரை எலும்பும் தோலுமாக ஆகிவிட்டது.

மூன்று மாதங்கள் கழிந்தன.


அரசர் தாம் கொடுத்திருந்த குதிரைக் குட்டிகளைக் கொண்டு வந்து காட்டச் சொன்னார். எல்லோரும் தாங்கள் வளர்த்த குதிரைகளை அரண்மனைக்குக் கூட்டி வந்தனர்.

ஆனால், தெனாலி இராமனின் குதிரை மட்டும் அரண்மனைக்கு வரவில்லை.

''இராமா, உன்னுடைய குதிரை எங்கே?'' என்று இராமனைப் பார்த்துக் கேட்டார் இராயர்.

''அரசே, அந்த முரட்டுக் குதிரையை என்னால் இழுத்துக் கொண்டு வரமுடியவில்லை. நம்முடைய குதிரை இலாயத் தலைவரான அபூபக்கரை அனுப்பினால் அவரால் அதனைப் பிடித்துக் கொண்டு வர முடியும் என்று நினைக்கிறேன்'' என்றான் இராமன்.

''அவ்வளவு பலமுள்ள முரட்டுக் குதிரையாகவா அது இருக்கிறது? சரி, நம் அபூபக்கரை அனுப்பிப் பிடித்து வரச் சொல்வோம்'' என்று கூறிய இராயர்,



www.tamilarangam.net

அரண்மனை இலாயத் தலைவனான அபூபக்கரைக் கூப்பிட்டு இராமனின் குதிரையைக் கொண்டு வருமாறு கூறினார்.

அபூபக்கர் இராமனின் வீட்டுக்குச் சென்றான். இராமனின் மனைவியிடம் "குதிரை எங்கே இருக்கிறது?" என்று கேட்டான்

அவள் குதிரைக் கொட்டிலை அபூபக்கருக்குக் காட்டினாள்.

அபூபக்கர் குதிரைக் கொட்டிலருகில் சென்றான்.

அங்கே நான்கு புறமும் சுவர் எழுப்பியிருந்தது. ஒரே ஓர் இடத்தில் மட்டும் தலைக்குமேல் ஒரு சன்னல் தெரிந்தது. அதன் வழியாக உள்ளே எட்டிப் பார்த்தான் அபூபக்கர்

அபூபக்கரின் பழுப்பு நிறத் தாடி சன்னல் வழியாக அவனை முந்திக் கொண்டு உள்ளே நுழைவதைப் பார்த்ததும் தெனாலி இராமனின் குதிரை, 'தெனாலி இராமன்தான் தனக்குக் காய்ந்த புல்லைக் கொண்டு வந்திருக்கிறான்' என்ற நினைப்புடன் அபூபக்கரின் தாடியைப் பற்றி இழுத்தது.

அபூபக்கர் அலறித் துடித்தான்.

அரண்மனையிலிருந்து வந்த காவலர்கள் அபூபக்கரின் தாடியை வெட்டி, அவனைக் குதிரையிடமிருந்து காப்பாற்றினார்கள்.

பின்னர் தெனாலி இராமனின் குதிரையை முன்னால் நான்கு பேர் இழுக்க, பின்னால் இரண்டு பேர் தள்ள அரண்மனைக்குக் கொண்டு வந்தார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இராமனின் குதிரையைப் பார்த்ததும், "இராமா! குதிரைக்குச் சரியான முறையில் தீனி போடாமல் ஏன் இப்படி வளர்த்தாய்?" என்றார் இராயர்.

"அரசே, நான் கொஞ்சமாகத் தீனிபோட்டு வளர்த்ததற்கே இந்தக் குதிரை எல்லோரையும் படாதபாடு படுத்தி இலாயத் தலைவரின் தாடியைப் பிடித்து இழுத்திருக்கிறதே! அதுமட்டுமல்லாமல் அதனை இங்கு கொண்டுவர முன்னால் நான்கு பேரும் பின்னால் இரண்டு பேரும் தேவைப் படுகின்றனர். நான் சரியான முறையில் இதற்குத் தீனி போட்டு வளர்த்திருந்தால் இன்னும் எத்தனை பேரின் தாடியைப்பற்றி இழுத்திருக்குமோ? அதுவும் தவிர இதனைப் போர்க்களத்திற்கு ஓட்டிச் செல்ல நிறைய ஆட்கள் தேவைப் பட்டிருப்பார்கள். இதை யெல்லாம் எண்ணித்தான் நான் அவ்வாறு செய்ய வில்லை அரசே!" என்றான் இராமன்.

இராமனுடைய விகடப் பேச்சு இராயருக்குச் சிரிப்பை வரவழைத்தது. ஆயினும் அவன் பேரிலுள்ள கோபம் அடங்கவில்லை.

"அரசே! குடிமக்களுக்கு எவ்வளவோ தொல்லை கள் இருக்கும். இதற்கு இடையில் இம்மாதிரி ஒரு சுமையைத் தாங்கள் அவர்கள் மீது சுமத்தியதற்கு எதிர்ப்புக் காட்டுவதற்காகத்தான் நான் இம்மாதிரி செய்தேன்" என்றான் இராமன்.

இராமன் சொன்னதைக் கேட்ட இராயர், அந்த குதிரை வளர்ப்புத் திட்டத்தை அத்துடன் கைவிட்டார்.

www.tamilarangam.net

அது,
உங்களுக்குச் சொந்தமானது தான்
ஆனால், உங்களை விட மற்றவர்கள் தான்
அதிகம் உபயோகிக்கின்றார்கள்.
அது என்ன?

மற்றவர்கள் உபயோகிக்கும் போது
உங்களுக்கு அதைத் தெரிகின்றது
ஆனால், நீங்கள் உபயோகிக்கும் போது
அது உங்களுக்குத் தெரிவதில்லை
அது என்ன?

கவிஞன் பிறக்கிறான்: ஆனால்
உருவாக்கப்படுவதில்லை.
குற்றவாளி பிறப்பதில்லை: ஆனால்
உருவாக்கப்படுகின்றான்.

www.tamilarangam.net

# மகிழ்ச்சி

ஓர் அரசர் ஒரு சமயம் நோய் வாய்ப் பட்டிருந்தார். நோயினால் அதிகம் துன்பப்பட்டார். தனது நோயைக் குணமாக்குபவருக்குத் தனது நாட்டின் பாதியைத் தருவதாக அறிவித்தார்.

அரசனைக் குணப்படுத்துவது எப்படி என்று அரசவையைச் சேர்ந்தோர் கூடி ஆலோசனை செய்தனர். ஒரே ஒருவர் தனக்குத் தெரிந்த யோசனையைச் சொன்னார். "மகிழ்ச்சி வாழ்க்கை நடத்தும் ஒரு மனிதனைக் கண்டு பிடித்து, அவனுடைய மேலங்கியைக் கழற்றி வந்து. அதை அரசருக்கு அணிவித்தால் அரசர் குணமடைவார்" என்பது தான் அவரின் யோசனையாகும்.

அரசரும் மகிழ்ந்து, மகிழ்ச்சியுடன், கவலையில்லாமல் வாழும் மனிதனைத் தேடிப்பிடித்து வருமாறு தனது ஆட்களை நாட்டின் எல்லாப் பக்கங்களுக்கும்

www.tamilarangam.net

அனுப்பிவைத்தார். அவர்கள் எல்லா இடமும் தேடி
னார்கள். ஆனால் மகிழ்ச்சியானவனைக் காண
முடியவில்லை. ஒருவன் பணக்காரனாக இருந்தா
ல், உடல் நலம் இல்லாதவனாய் இருந்தான்.
உடல் நலம் உள்ளவன், பணம் இல்லாது
கவலையாய் இருந்தான். உடல் நலமும், பணமும்
உள்ளவன் மனைவியாலோ, பிள்ளைகளாலோ
கவலைப்பட்டான்.

எங்கு பார்த்தாலும் ஏதோ ஒரு குறையுள்ளவர்களும், ஏதோ ஒன்றினால் கவலைப் படுபவர்களுமே இருந்தனர்.



மேல் அங்கி

ஒரு நாள் அரசகுமாரன் ஒரு சிறு குடிசையின் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தான். "ஆண்டவன் அருளால் இன்றும் மகிழ்ச்சியாக இருக்கிறேன் இனி அமைதியாகப் படுத்து உறங்கலாம்! என்று குடிசைக்குள் கதைக்கும் குரல் கேட்டது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இவன் தான் மகிழ்ச்சியுடனும், கவலை இல்லாமலும் வாழ்கிறான் இந்த மனிதனின் மேலங்கியை எவ்வளவு பொன் கொடுத்து என்றாலும் வாங்கிக் கொள்ள வேண்டும், என்று காவலரைக் அக்குடிசைக்குள் இருக்-கும் மனிதனின் மேலங்கியை வாங்கிவர அனுப்பினான்.

காவலர் குடிசைக்குள்ளே போனார்கள். ஒரு மனிதன் இருந்தான். அவன் ஏழையாய் இருந்தபடியால்;... அவனிடம் மேலங்கி இருக்கவில்லை #

இக் கதை அறிஞர் டால்ஸ்ரோய் எழுதிய நீதிக் கதையில் வருகின்றது. மகிழ்ச்சி என்பது வாழும் நிலையில் இல்லை. அது அவரவர் மனதிலிருந்தே வருகின்றது. மேலங்கி இல்லாதவனும் மகிழ்ச்சியுடன் வாழமுடியும். மகிழ்ச்சி என்பது ஆடம்பரம், போலித்தனங்களில் இல்லை. என்ற உண்மை இதில் சொல்லப்பட்டுள்ளது.

www.tamilarangam.net



# இந்திரா காந்தி

இந்திரா காந்தி என்றால் அறியாதவர் இல்லை எனலாம். ஐரோப்பிய நாட்டவர் பலர் இன்றும் மகாத்மாகாந்தியின் மகள் தான் இந்திரா காந்தி என நம்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்திரா காந்தி, நேருவின் மகள். பரோஸ் காந்தியின் மனைவி ஆவார்.

சில வருடங்களுக்கு முன்னர் தனது காவலாளிகளாலே சுடப்பட்டு இறந்தார். எதற்குமே பயப்படாத குணம் கொண்ட இவர்; இளமைக்காலத்திலும் பயப்படாத தன்மை, துணிவு, சரிஎனப்பட்டதைத் தாமதியாமல் செய்யும் தன்மை கொண்டவராக இருந்து வந்திருக்கின்றார்.

இந்தியாவை ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில், சுதந்திரத்திற்காக

www.tamilarangam.net

இந்திய மக்கள் போராடினார்கள். ஆயிரக் கணக்கில் மக்கள் இறந்தார்கள். ஆயிரக் கணக்கில் சிறையில் அடைக்கப் பட்டனர். இந்திரா காந்தியின் தந்தை, தாத்தா, அடிக்கடி பொலிஸாரினால் கைது செய்யப் பட்டனர். இதனால் பொலிஸார் மீது இந்திரா காந்திக்கு வெறுப்பு ஏற்பட்டது.

குழந்தைகளுக்குப் பொம்மை என்றால் பிடிக்கும். ஒவ்வொரு குழந்தையும் தனக்கு விருப்பமான முறையில் பொம்மை களை வைத்து விளையாடுவார்கள். சிலர் தலை இழுத்துச் சட்டை போட்டு அலங்கரிப்பர். சிலர் சாப்பாடு ஊட்டி விளையாடுவர். சிலர் பாட்டுப்பாடித் தூங்கவைப்பர்.

ஆனால், குழந்தை இந்திரா காந்திக்கு பொம்மைகளைப் பொலிஸ்கார ராக வைத்து தன்னால் முடியுமட்டும் அடித்து நொருக்குவது தான் விளையாட்டாக இருந்தது. காரணம் பொலிஸ் மீது இருந்த வெறுப்பே ஆகும். சிலவேளைகளில்

www.tamilarangam.net

இது அப்பாப் பொம்மை. இது தாத்தாப் பொம்மை இது பொலிஸ்காரப் பொம்மை கள் என்று பொம்மைகளை அடுக்கி ஒன்றன் பின் ஒன்றாக வைத்துவிட்டு அப்பாப் பொம்மையையும் தாத்தாப் பொம்மையையும் பார்த்துப் பொலிஸ் பொம்மை வருகிறது. ஒடி ஒளியுங்கள் எனக்கத்துவார். பின்னர் வழமைபோல பொலிஸ்பொம்மை களுக்கு தாத்தாவைப் பிடிக்க வருகிறியா? அப்பாவைப் பிடிக்க வருகிறியா? எனக் கேட்டுக் கேட்டு அடி விழும்.

பொலிஸாரினால் கைதுசெய்யப் பட்டவர்களின் வீடுகளில் இருந்த விலை உயர்ந்த பொருட்களும் பொலிஸாரினால் எடுத்துச் செல்லப்பட்டன. ஒரு நாள் இந்திரா காந்தியின் வீட்டிற்கு வந்த பொலிஸார் விலை உயர்ந்த பொருட்களை எடுத்துக் கொண்டிருந்தார்கள். குழந்தை இந்திரா காந்தி குசினிக்குள் ஓடிப் போய் ஒரு கத்தியை எடுத்துக் கொண்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வந்து பொலிஸ் அதிகாரியின் மீது குத்துவ
ற்குப் பாய்ந்தார். சிறுமியின் செயலைக்கண்ட
பொலிஸ் அதிகாரிகள் ஆச்சரியப்பட்டார்கள் *

"இச்சம்பவம் இந்திராகாந்தியின் வரலாற்றிலி
ருந்து எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.
பரோஸ் காந்தியைத் திருமணம் செய்து
கொண்ட பின்னரே இந்திரா காந்தி
என்ற பெயர் ஏற்பட்டது. சிறுமியாக
இருந்த போது 'இந்து' எனச் செல்லமாக
அழைக்கப் பட்டார். இந்திரப் பிரியதர்சினி
என்பதே அவரது உண்மைப் பெயராகும்.
சிறுமி இந்திராகாந்தி, குழந்தை இந்திரா
காந்தி எனக் குறிப்பிட்டுள்ளது. சிறுவர்
கள் விளங்கிக் கொள்ள இலகுவாய்
இருக்கும் என்ற காரணத்தினாலே ஆகும்."

சர்வதேச சிறுமியர் ஆண்டு 90 கொண்டாடப்
படும் இவ்வேளையில் துணிவு மிக்க சிறுமி
ஒருவரின் சம்பவமாக இது பிரசுரமாகின்றது
*

www.tamilarangam.net

# ஏன்?

2200 ஆண்டுகளுக்கு முன்னர் மன்னன் மகா அலெக்ஸ்சாந்தரின் தளபதி கிரீஸ் நாட்டின் தலைநகர் ஏதன்ஸ் மீது படை எடுத்து அதனைக் கைப்பற்றினான். அவ்வேளையில் ஏதன்ஸ் நகர மக்களில் ஐம்பது குழந்தைகளைத் தன்னிடம் ஒப்படைத்தால்? அந்நகரை நாசம் செய்வதில்லை என்று தளபதி அறிவித்தான். அப்போது அந்த நகரத்து மக்கள் "குழந்தைகளுக்குப் பதிலாக நூறு மனிதர்களைத் தருவதாகக் கூறினார்கள். காரணம்: "குழந்தைகள் தான் ஒருநாட்டின் செல்வங்கள்" அவர்கள் தவறான வழியில் நடாத்தப்பட்டால் அதை விடக் கேவலம் வேறொன்றுமில்லை என மறுத்தமையே ஆகும்.

எம் நாட்டின் செல்வங்

களான எம் குழந்தைகள் அன்னிய நாடுகளில் படும் வேதனைகள் நாம் ஏன் சிந்தித்துப் பார்க்கக் கூடாது?

www.tamilarangam.net

# வெளிநாடு

அண்மையில் பரிஸில் அரசியல் தஞ்சம் கோரியவர்களின் விண்ணப்பம் தொடர்பான விசாரணை நடைபெற்றது.

இலங்கைத் தமிழ்ச் சிறுவன் ஒருவன்... தான் இங்கு ஐந்து வருடங்கள் வாழ்ந்து வருவதாகவும் தன்னால் இனி நாடு திரும்பிப் போய் தனது தாய்மொழியை படிக்க முடியாது என்றும், தனக்காகத் தனது பெற்றோர்களின் விண்ணப்பத்தையும் ஏற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டான்.

அவன் அடுத்து கொலம்பியா நாட்டுச் சிறுவன் அழைக்கப்பட்டான்.

' எனக்கு இங்கு ஒரு வருடம் மட்டும் இருக்க அனுமதி தந்தால் போதும். எனது படிப்பு முடிந்துவிடும். எனது படிப்பின் பயன் எனது நாடு பெறவேண்டும். அதுதான் எனது நாட்டிற்கு நான் செய்யும் சேவை" என்றான். பரிஸிலிருந்து வெளிவரும் பிரபலமான தினசரி

வொன்றில் இச் செய்தி வெளியாகியுள்ளது.
'தமிழர்கள் தமது படிப்புத் தமது நாட்டி
ற்குப் பயன் படவேண்டும், என்று
நினைப்பதேயில்லை. அவர்கள் வெளிநாடுகளில்
வாழ்வதையே பெருமையாக நினைக்கின்றார்
கள்.' எனவும் இத்தலாகக் குறிப்பிட்
டுள்ளது. [redacted] பிரெஞ் தினசரியிலிருந்து

- இராசி -

செய்திகள்

Heinsberg kreis ல் வேலை செய்யும்
ஒரு தமிழ்க் குடும்பம். அம்மாவும்
வேலை அப்பாவும் வேலை. குழந்தைக்கு
ஒரு *சூப்பிப் போத்தலில்கரைத்த மா தான்
துணை. அம்மாவும் அப்பாவும் வேலையால்
வருமட்டும் குழந்தைக்குச் சூப்பிப்போ
த்தலில் பால் இருந்தாலும் சரி இல்லாவிட்
டாலும் சரி அதனோடுதான் வாழ்க்கை.

Frankfurt/m ல் ஒரு வேலை செய்யும்

*Feeding bottel

www.tamilarangam.net

* ஒரு தமிழ்க் குடும்பம். வேலைக்குப் போகும் போது டிவியை ON செய்து விட்டுப் போவார்கள். சிறு குழந்தைக்கு டிவி நல்ல கொண்டாட்டம். சிலமாதங்களால் குழந்தையின் இரு கண்களும் OFF ஆகி விட்டன *


* ஜேர்மனியில் உள்ள பல தமிழ்ப் பாடசாலைகளில் சிறுவர்களின் வரவு குறைந்து வருகின்றது. தமிழ் படிப்பதால் Deutsch பாதிக்கப் படுவதாக பெற்றோர் பலர் கவலை தெரிவித்துள்ளனர் *

* Bergheim (Erft) ல் இயங்கிவரும் தமிழ்ப் பாடசாலைக்கு CARITAS நிறுவனம் உதவி செய்ய முடியாது என அறிவித்துள்ளது.

* நீங்கள் ஏன் தமிழ் படிக்க வேண்டும்? என்று DIÖZESAN KÖLN அதிகாரி ஒருவர், அவரைச் சந்தித்த இராஜேஸ்வரனிடம் கேட்டாராம் *

www.tamilarangam.net

கடந்த எண்ணம் 4ல் உங்களுக்குத் தெரியுமா? எலிகளின் கணக்கு விடைகள் திரப்படவில்லை. எலிகள் 2, 3, 4 என்று பெருகின்றன. இந்த மூன்று எண்களாலும் பிரிக்கப்படக் கூடிய ஒரு எண்ணை இறுதியில் Dல் வந்து நின்ற எலிகள் ஆகும். 12, 24, 48 என்பவற்றில் ஏதாவது ஒன்றைக் கொண்டு Dயிலிருந்து C, B, A என்று செய்ய விடைவரும். 24 எனக்கொண்டால்?





ஆரம்பத்தில் Aயில் நின்றவை 41. ஆகும்.

15 வரக்கூடியதாக
9 சதுரங்களில் வந்த விடையிதுவே

| | | |
|---|---|---|
| 8 | 3 | 4 |
| 1 | 5 | 9 |
| 6 | 7 | 2 |

www.tamilarangam.net

# கண்டுபிடிப்பு - விமானம்




ரைட் சகோதரர்கள் இருவரும் 1903ம் ஆண்டு விமானத்தைக் கண்டுபிடித்தார்கள். இவர்கள் அமெரிக்கர்கள். இளையவரின் பெயர்: ஆர்வில்லி ரைட் (ORVILLE WRIGHT) 1871-1948. மூத்தவரின் பெயர்: வில்பர் ரைட் (WILBUR WRIGHT) 1864-1912.

1903ம் ஆண்டு டிசம்பர் 17ம் திகதி வடகரோலினா மாநிலத்தில் தமது முதலாவது விமானத்தை ஓட்டிக் காட்டினர். இதுவே உலகின் முதலாவது விமானப் பயணமாகும்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உங்களுக்குத் தெரியுமா?

உங்கள் கையில் 10க் கற்கள் எடுத்துக் கொள்ளுங்கள். அவற்றை கீழே உள்ளது போல



அடுக்கிய பின்னர்;

இப்படிக் கற்களை நகர்த்தலாம். நீங்கள் எடுக்கும் கல்லை விட மூன்றாவது கல்லுடன் மேலே காட்டப்பட்ட அம்புக்குறி போல சோடி சேர வேண்டும். மொத்தம் ஐந்து சோடிகள் வர வேண்டும்.

முயன்று பாருங்கள். இல்லையேல் அமுதம் ஆனி இதழ் வரை காத்திருங்கள். *

- ஸ்ரீ.

கவனிக்கவும்...

அமுதத்திற்குப் பலரிடமிருந்து, பலதரப்பட்ட ஆக்கங்கள் வந்து கொண்டே இருக்கின்றன. இடமின்மையால் பிரசுரமாகவில்லை. பிரசுரமாகவில்லையே என்று அனுப்புவதை நிறுத்திவிட வேண்டாம்.

= ஆசிரியர் =



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலக்கியத்தை நோக்கி

* விமர்சனம் என்பது பிழைகளை மட்டும் தேடிப் பிடிப்பதாய் இருக்கக் கூடாது நல்லவைகளையும், சரியானவைகளையும் சுட்டிக்காட்டுவதாயும் இருக்க வேண்டும்

பாரதிதாசனைப் பற்றி விமர்சிக்கும் போது "துன்பம் வரும் போது யாரா-வது யாழ் எடுத்து மீட்டுவார்களா? என்பதை மட்டும் பார்க்காமல்....
"கோரிக்கை அற்றுக் கிடக்குதண்ணே இந்த வேரிற் பழுத்த பலா" என்பதையும் பார்த்தால் தான் அது ஒரு விமர்சனம் என்ற நிலையை அடையும். *

* நாம் எதைப் பற்றிப் பேசுகின்றோமோ? எழுதுகின்றோமோ? அது எமது மண்ணுக்கு எந்தளவில் பொருந்தும் என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும். பேச்சுக்-காக எழுத்துக்காக மண்ணை மறந்து விடக் கூடாது *



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* மிருகங்கள், பறவைகள் கதைப்பது போல கதைகள் எழுதி சிறுவர் மத்தியில் பிழையான எண்ணத்தை "அழுதம்" வளர்க்கின்றது. என்ற வாதம் சிறுபிள்ளைத்தனமானது. எந்த நாட்டுச் சிறுவர் இலக்கியங்களில் மிருகங்கள் பறவைகள் பேசவில்லை?*


* மொழியின் வளர்ச்சிக்கு அதன் எழுத்து வடிவங்களில் உள்ள பிழையைவிட, அன்னிய மொழிகளில் சரணடைகின்ற மக்களின் அடிமைத்தனம் தான் காரணம்*

* அகதி வாழ்க்கையினால், நம் பலர் மத்தியில் தாழ்வு மனப்பான்மையும் (INFERIORITY COMPLEX) அதனால் சிலவற்றில் (ILLUSION) மாயத்தோற்றத்தையும் ஏற்படுத்துகின்றது. முன்னர் மதத்தில் அது ஏற்பட்டது. தற்போது மொழியில் புகுந்துள்ளது*

" சின்ன- இராஜேஸ்வரன் "

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




KINDERFREUNDLICH MAGAZIN

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்